**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு மறுவாழ்வு இல்லங்கள் – சென்னை – தொழுநோயால் பாதிக்கப்பட்ட கூடுதலாக கண்டறியப்பட்டுள்ள 309 பயனாளிகளுக்கு 2014–2015ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்குவது – ரூ.76,86,000/– – நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை ( நிலை) எண் 16** — **நாள் 03.03.2016**

**மன்மத–மாசி 20,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2047**

**படிக்கப்பட்டது:**

1 அரசாணை (நிலை) எண்.124, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 24.12.2012.

2 அரசாணை (நிலை) எண்.66, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.2) துறை, நாள் 12.07.2013.

3 அரசாணை (நிலை) எண்.6, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 22.01.2015.

4 மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.484/ம.இ.நிர்–3/2014, நாள் 06.03.2015.

------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு, பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், தொழுநோயால் பாதிக்கப்பட்ட 6161 நபர்களுக்கு மாதம் ரூ.1,000/– என்ற வீதத்தில், 2012–2013ஆம் நிதியாண்டில், டிசம்பர், 2012 முதல் மார்ச், 2013 வரையிலான நான்கு மாதங்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்க ரூ.2,58,82,370/– நிபந்தனைக்களுக்குட்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 2013–2014 ஆம் நிதியாண்டிலிருந்து இத்திட்டத்திற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்குள் ஏற்கனவே பயன்பெறும் பயனாளிகளுக்கு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் அலுவலர் மூலமாக ஒவ்வொரு மாதமும் மைய வங்கி முறையின் (Core Banking System) கீழ் பராமரிப்பு உதவித் தொகை வழங்க, முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும், மேலும், இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே பயன்பெறும் பயனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்க வரவு–செலவு திட்டத்திற்கு மேலாக கூடுதல் நிதி ஒதுக்கீடு தேவைப்படின், அதற்குரிய கருத்துருவினை அரசிற்கு அனுப்பி வைக்க முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

[த.பி.பா]

**3.** மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், **2014–15** ஆம் நிதியாண்டில், கூடுதலாக கண்டறியப்பட்டுள்ள **280** தொழுநோயாளிகளுக்கு, பராமரிப்பு உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.**1,000/–** என்ற வீதத்தில், டிசம்பர் **2014** முதல் மார்ச் **2015** வரையிலான **4** மாதங்களுக்கு, மின்னணு தீர்வு சேவையின் (Electronic Clearing Service (ECS)) மூலம் பராமரிப்பு உதவித் தொகை வழங்க ஏதுவாக ரூ.**11,20,000/–** (ரூபாய் பதினொன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும் இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**4.** மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் **2014–2015**ஆம் நிதியாண்டில், கூடுதலாக கண்டறியப்பட்டுள்ள **309** தொழுநோயாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை பிப்ரவரி **2015** முதல் மார்ச் **2015** வரையிலான **2** மாதங்களுக்கு வழங்க ஏதுவாக, ரூ.**6,18,000/–**நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசை கோரியிருந்தார். இதன்பொருட்டு, அரசாணை (நிலை) எண்.**6**, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.**1**) துறை, நாள் **22.01.2015**ல், **2014–15**ஆம் நிதியாண்டில், கூடுதலாக கண்டறியப்பட்ட **280** தொழுநோயாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.**1000/–** வீதம் டிசம்பர் **2014** முதல் மார்ச் **2015** வரையிலான **4** மாதங்களுக்கு ரூ.**11,20,000/–** நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளதையடுத்து **2014–15** ஆம் நிதியாண்டில், கூடுதலாக கண்டறியப்பட்டுள்ள **309** தொழுநோயாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் எனவும் **2015–16** ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கத்தில் வழங்கப்பட்ட ரூ.**6** கோடி நீங்கலாக, ரூ.**76,86,000/–** கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்:-

| **2015–16ல் பயனாளிகளின் எண்ணிக்கை** | **2015–16 நிதி ஒதுக்கம் (BE)** | **பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை (11 மாதங்களுக்கு)** | **இறுதி இருப்பு** | **5280 பயனாணிகளுக்கு ஒரு மாதத்திற்கான தேவை** |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 5280 | ரூ.6,00,00,000/– | ரூ.5,80,80,000/– | ரூ.19,20,000/– | ரூ.52,80,000/– |

| **பிப்ரவரி 2015ல் கண்டறியப்பட்ட கூடுதல் பயனாளிகள்** | **309 பயனாளிகளுக்கு பிப்ரவரி 2015 முதல் மார்ச் 2016 வரை 14 மாதங்களுக்கு தேவைப்படும் தொகை** | **2015–16 ஆம் நிதியாண்டில் கூடுதலாக தேவைப்படும் தொகை (கலம் 4 = கலம் 8)** |
|---|---|---|
| (6) | (7) | (8) |
| 309 | ரூ.43,26,000/– | (52,80,000 + 43,26,000 = 96,06,000 – 19,20,000 = ரூ.76,86,000/– |

**5.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, **2015–2016**ஆம் ஆண்டிற்கு **5280** பயனாளிகளுக்கு பிப்ரவரி, **2015** முதல் மார்ச், **2016** வரையிலான காலத்திற்கு பராமரிப்பு உதவித் தொகை ரூ.**52,80,000/–**ம், கூடுதலாக கண்டறியப்பட்ட **309** பயனாளிகளுக்கு தேவையான பராமரிப்பு உதவித் தொகை ரூ.**43,26,000/–**ம், [ரூ.**52,80,000/–** + ரூ.**43,26,000/–** = ரூ.**76,86,000/–** (**2015–2016**ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்ட

ரூ.6.00 கோடி நீங்கலாக)] ஆக மொத்தம் ரூ,76,86,000/– (ரூபாய் எழுபத்தாறு இலட்சத்து எண்பத்தாராயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

**6.** மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

> “**2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 104 –முதியோர், இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் – II திட்டத்தில் சேராதது – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டம் பணிகள்** – KQ – **தொழுநோயால் பாதிக்கப்ட்டவர்களுக்க பராமரிப்பு உதவித் தொகை–09–உதவித் தொகை–03** – **குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை”. (கு.தொ.கு.2235–02–104–**KQ**–0938)**

**7.** இத்திட்டத்திற்கென தேவைப்படும் கூடுதல் நிதியொதுக்கம் துணை மதிப்பீடுகளில் **2015–2016**ல் சேர்க்கப்பட்டுள்ளது.

**8.** இவ்வாணை நிதித் (ச.ந.) துறையின் அலுவல் சாரா எண் **16641** /நிதி (ச.ந.)/**2016–1**, நாள் **03.03.2016**–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து அரசு மறுவாழ்வு இல்லங்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:**

இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.
நிதி (ச.ந.) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்